JABATAN PERDANA MENTERI
UNIT TRANSFORMASI MASYARAKAT INDIA MALAYSIA

**UNIT TRANSFORMASI MASYARAKAT INDIA MALAYSIA**
**JABATAN PERDANA MENTERI**
Aras 4, Blok D5, Kompleks D
Pusat Pentadbiran Kerajaan Persekutuan
Presint 1, 62502, Wilayah Persekutuan Putrajaya, Malaysia
No. Tel: 03-8886 6221
E-mel: infomitra.jpm.gov.my

**JPM.MITRA.100-9/1/1 (3)**

# பத்திரிகை செய்தி

**புத்ராஜெயா, 19 ஏப்ரல் 2023 -** தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் வணக்கம். இந்த வரலாற்றுப்பூர்வ நாளில் தங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

பிரதமர் துறையின் கீழ் இயங்கும் 'மித்ரா' என்றழைக்கப்படும் மலேசிய இந்தியச் சமூக உருமாற்றப் பிரிவின் புதிய இலக்கு நோக்கிய பயணத்துக்கு ஆலோசனை வழங்கவும், அதன் செயல்பாடுகளை தீவிரமாகக் கண்காணிக்கவும் சிறப்பு நடவடிக்கைக் குழு ஒன்று அதிகாரப்பூர்வமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் அவர்களின் ஆலோசனையின் பேரில் தோற்றம் கண்டுள்ள இந்தச் சிறப்பு நடவடிக்கைக் குழுவுக்கு நான் டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன் (சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினர்) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை தங்களிடம் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியச் சமூகத்தின் மேம்பாட்டுக்கு வித்திடக்கூடிய ஓர் அரசு கேந்திரத்திற்கு எனது பங்களிப்பையும் வழங்குவதற்கான ஓர் அரிய வாய்ப்பையும் அங்கீகாரத்தையும் வழங்கியிருக்கும் மாண்புமிகு பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சிறப்பு நடவடிக்கைக் குழுவின் உறுப்பினர்களாக மேலவை உறுப்பினர் மாண்புமிகு டத்தோ சி.சிவராஜ், கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு வீ.கணபதிராவ், சிகாமாட் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு

ரா.யுனேஸ்வரன், மித்ரா தலைமை இயக்குநர் கே.ரவீந்திரன் நாயர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மக்களவை உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர் ஒருவரும் அடங்கியிருக்கும் இச்சிறப்பு நடவடிக்கைக் குழுவின் முதலாவது அதிகாரப்பூர்வ கூட்டம் இன்று மித்ரா தலைமையகத்தில் முறையே நடைபெற்றது.

இந்த நடவடிக்கைக் குழு, மித்ரா செயலகத்தின் பலவீனங்களையும் பிரச்சினைகளையும் முழுமையாக ஆராய்ந்து, தீர்வுக்குரிய செயலாக்கப் பணிகளை மிகத் தீவிரமாக மேற்கொள்வதோடு, சிக்கல்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கலையெடுக்கும்.

இந்திய மக்களை நாடுவது, அவர்கள் மீது முழு கவனம் செலுத்துவது என்பது எங்களின் முதன்மை நோக்கமாகும். இந்திய மக்களுக்கு விழிப்புணர்வு கொடுக்க வேண்டிய கடப்பாடும் இதில் அடங்குகிறது.

இதற்கிடையில், 2023ஆம் ஆண்டுக்கான மித்ராவின் மானிய விண்ணப்பம் கடந்த மார்ச் 20ஆம் தேதி திங்கட்கிழமை தொடங்கியது. இந்த விண்ணப்பதிற்கான இறுதி நாள் வரும் ஏப்ரல் 28ஆம் தேதி மாலை 5.00 மணி வரை என நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

எனினும், இன்னும் அதிகமான இயக்கங்கள் சமூக நலத் திட்டங்களை செயலாற்றுவதற்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதற்காக, இம்மானிய விண்ணப்பத்திற்கான இறுதி நாள் மே மாதம் 15ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுகின்றது.

சமூக மேம்பாட்டுக்கான பல நல்லத் திட்டங்களைக் கொண்டிருக்கும் அரசு சாரா அமைப்புகள், இந்தக் கால நீட்டிப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இம்மானியத்துக்கான விண்ணப்பப் பாரத்தை https://spgkmitra.jpm.gov.my/ என்ற அகப்பக்கத்தின் வழி பதிவிறக்கம் செய்து, முழுமையாகப் பூர்த்தி செய்த பின், அதனை இணையம் வழி அனுப்ப வேண்டும்.

இதனிடையே, மித்ரா மானியத்தை முழுமையாக உபயோகித்து முடிக்க 8 மாதம் வரை கால அவகாசம் உள்ளதாக சில அரசியல்வாதிகள் சொல்லி வருகிறார்கள்.

ஆனால், சொல்லப் போனால் நமக்கு கிட்டத்தட்ட இன்னும் 6 மாதகால அவகாசம் மட்டுமே உள்ளது. அதாவது, அரசாங்கம் மித்ராவுக்கு ஒதுக்கியிருக்கும் முழு மானியத்தையும் அக்டோபர் மாதத்திற்குள் பயன்படுத்தி முடிக்க வேண்டும்.

இப்போது ஏப்ரல் மாதத்தில் இருக்கின்றோம். முழு மானியத்தையும் சரியான முறையில் உபயோகிப்பதற்கு மிக குறுகியக் கால அவகாசத்தையே கொண்டிருக்கின்றோம்.

எதுவாகினும், மித்ரா மானியம் முழுவதும் முறையே மக்களைச் சென்றடைய வேண்டும் என்பது மட்டுமே எங்களின் எண்ணமாக இருக்கின்றது. இப்பணம் தவறான வழியில் சென்றடையக் கூடாது. மக்களுக்கு நல்ல முறையில் சென்றடைய வேண்டும்.

மித்ராவின் நிதி விவகாரம் குறித்து சமூக வலைத்தளங்களில் பல விதமான கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. இது குறித்தும் நாங்கள் விசாரிப்போம். எனினும், நாங்கள் முன்னோக்கிச் செல்ல விரும்புகின்றோம்.

மித்ராவின் உதவிகள் முதலில் வரிய நிலை குடும்பங்களைச் சென்றடைய வேண்டும் என இச்சிறப்பு நடவடிக்கைக் குழு முடிவெடுத்துள்ளது. இதன் வழி மக்கள் முன்னேற வேண்டும் என்பது எங்களின் முதற்கண் விருப்பமாக இருக்கின்றது.

மித்ராவின் மானிய விண்ணப்பங்கள் மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன. அவை, கல்வி - உயர் நிலைக்கல்வி பிரிவு, பொருளாதாரம் - தொழிற்பயிற்சி பிரிவு, சமூக நலன் - சமூக மேம்பாட்டுப் பிரிவு போன்றவை ஆகும்.

இம்மூன்று பிரிவுகளின் கீழ், துறை சார்ந்த இதர செயல்திட்டங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. இதன் விவரங்கள் அனைத்தும் மித்ரா அக்கப்பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் இயக்கங்கள் யாவும் மானிய விண்ணப்பங்களைச் செய்யலாம்.

இனி, மித்ராவின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையைப் பார்க்கலாம். அரசாங்கத்தின் வரையறைக்கு உட்பட்டு எங்களின் செயல்பாடுகள் இருக்கும். மித்ராவின் மானியம் பெருகின்ற அரசு சார்பற்ற அமைப்புகள், தனியார் நிறுவனங்களின் விவரங்கள் அனைத்தும் ஊடகங்களில் வெளியிடப்படும். இதில் எவ்வித ஒளிவுமறைவும் இனி இருக்காது.

மலேசிய இந்திய சமூகத்தின் உருமாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் முழுமையாகப் பயன்படக்கூடிய மிகச் சிறந்த அரசு கேந்திரமாக, இனி மித்ரா விளங்கும்! அந்த இலக்கை எட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும், புதுமைகளையும், உழைப்பையும் எனது தலைமையிலான இந்த மித்ரா சிறப்பு நடவடிக்கைக் குழு முன்னெடுக்கும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

இந்திய சமூகத்தின் வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக இருந்து வருகின்ற ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எங்களின் நன்றிதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி, வணக்கம்.

இக்கன்,

**மாண்புமிகு டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன்**
தலைவர், மித்ரா சிறப்பு நடவடிக்கைக் குழு.
சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினர்.

**- முடிவு -**